# படுகொலைகள்குறித்து மன்னிப்புச்சபை அக்கறை

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 16 இதழ் 77
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 28 — 04 — 1992

(லண்டன்)
தென்பகுதியில் 'கறுப்புப் பூனைகள்' மேற்கொண்ட படுகொலைகள் குறித்து சர்வதேச மன்னிப்புசபை விபரங்கள் திரட்டிவருவதாக தெரிவிக்கப்படுகிறது.
1987 முதல் 1990 வரையிலான காலப்பகுதியில் தென்பகுதியில் இடம்பெற்ற அரசியல் படுகொலைகளில் பெரு

[4-ம் பக்கம் பார்க்க]

## இரு மோதலில் 7 புலிகள் வீரமரணம்

(யாழ்ப்பாணம்)
மணலாறு, மட்டக்களப்பு பகுதிகளில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இரு வேறு சம்பவங்களில் ஏழு விடுதலைப்புலிகள் வீரச்சாவு அடைந்தனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## பதினோராம் கட்டையில் கடும் விமானத் தாக்குதல்

(மன்னார்)
மன்னார் 11ம் கட்டைக் கிராமத்தில் நேற்றுக் கடுமையான விமானத் தாக்குதல் நடத்தப்பட்டது.
நேற்றுப் பிற்பகல் 2-00 மணியளவில் குண்டு வீச்சு விமானங்களில் இருந்து இப்பகுதியில் குண்டுத் தாக்குதல்

(4-ம் பக்கம் பார்க்க)

★ மன்னாரில் நேற்று

# புலிகளின் வாகன கண்ணியில் பலபடையினர் உடல்சிதறிபலி

(யாழ்ப்பாணம்)
மன்னாரில் நேற்று விடுதலைப்புலிகளின் வாகனக் கண்ணிவெடி வெடித்ததில் பெருமளவு சிறிலங்கா படையினர் உடல் சிதறிப் பலியானார்கள், பலர் படுகாயமடைந்தனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## தெரிவுக் குழுவின் முடிவு வருட இறுதி வரை தாமதமாகும்?

(கொழும்பு)
இனப்பிரச்னை தீர்வு குறித்து நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் இறுதி முடிவு பெரும்பாலும் இவ்வருட இறுதிப் பகுதியிலேயே வெளியாகுமென தெரிவிக்கப்படுகிறது.
தீர்வு குறித்த சில முக்கிய விடயங்களில் பல தரப்புடனும் இணக்கம் காண வேண்டியுள்ளதால் தெரிவுக் குழுவின் இறுதி முடிவு வெளிவர தாமதமாகுமென தெரியவருகிறது.
இதேவேளை தெரிவுக்குழு மேற்படி முடிவிற்கு காலதாமதம் செய்ய ஜனாதிபதியும் அனுமதியளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஊரடங்கு அமுல்

(கொழும்பு)
வவுனியா, மன்னார் மாவட்டங்களில், பாதுகாப்புப் படையினரின் சட்டுப்பாடு தவிர்ந்த ஏனைய இடங்களில் இன்று முதல் ஊரடங்குச் சட்டம் அமுல்செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது
இன்று காலை 6-00 மணி முதல் இப்பகுதிகளில் அமுலுக்கு வரும் ஊரடங்குச் சட்டம், மறு அறிவித்தல் வரை அமுலில் இருக்கும் என கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

## பொலிஸாரின் பெற்றோர் பிக்குகளைச் சந்திப்பர்

(கொழும்பு)
யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டுக் கொழும்பு திரும்பிய பௌத்த பிக்குகளை, விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள பொலிஸாரின் பெற்றோரும், உறவினர்களும் சந்திக்க உள்ளனர்.
இச்சந்திப்பின்போது பொலி

(4-ம் பக்கம் பார்க்க)

## அவசரகாலவிதியில் 24மணிநேர தளர்வு

(கொழும்பு)
மே தினத்தை முன்னிட்டு அரசு அவசரகாலச் சட்ட விதிகளின் 12வது பிரிவை 24 மணி நேரத்திற்கு இடைநிறுத்தி வைக்கவுள்ளது.
ஊர்வலங்கள், கூட்டங்கள் நடைபெறுவதைக் கட்டுப்படுத்தும் இந்த அவசரகால விதிகள், ஏப்ரல் 30ம் திகதி முதல் மே முதலாம் திகதி நள்ளிரவு வரை தளர்வில் இருக்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

## இராணுவத்திற்கு புதிதாக ஆட்கள் சேர்ப்பு

(கொழும்பு)
இலங்கை ராணுவத்தினர் தொண்டர் படைக்கு ஆட்சேர்ப்பதற்கான அறிவித்தல் அரசினால் வெளியிடப்பட்டுள்

(4ம் பக்கம் பார்க்க

## தேர்தல் குறித்து அரசுக்குள் குழப்பம்

(கொழும்பு)
குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாக எந்த நேரத்திலும் பொதுத்தேர்தலை எதிர்கொள்ள தயாராக இருக்கு

[4-ம் பக்கம் பார்க்க]

## தீய சக்திகள் பற்றி ஜனாதிபதி எச்சரிக்கை

[கொழும்பு]
அடுத்த ஜனாதிபதித்தேர்தலில் தம்மைத தோற்கடிக்கும் முயற்சியில் சில தீய சக்திகள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக ஜனாதிபதி பிரேமதாசா கூறியுள்ளார்.
இரத்தினபுரியில் நடைபெற்ற கூட்டத்திலேயே அவர் அவர் இவ்வாறு கூறினார்.
அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடப்போவதாகவும் ஊழல்கள் மோசடிகளில் ஈடுபட்ட சக்திகளே தன்னை பதவியிலிருந்து அகற்றுவதற்கு முயற்சிப்பதாகவும் அவர் தெரிவித்தார். (மா)

## வவுனியா,மன்னார்பகுதிகளில் பெரும்இராணுவ நடவடிக்கை

[கொழும்பு]
வவனியா, மன்னார் பகுதிகளில் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.
இப்பகுதிகளில் இன்று முதல் காலவரையறையற்ற ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு பெரு இராணுவ தாக்குதல் நடத்தப் படையினர் திட்டமிட்டுள்ளனர்.
இந்த தாக்குதலுக்கான ஏற்பாடுகள் கடந்த ஒருவார காலமாக நடைபெற்று வந்தன. இதற்காக வவுனியா நகர் உட்பட மன்னார் பகுதி

(4ம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்ற தெரிவுக்குழு யாழ்ப்பாணம் வரலாம்

[கொழும்பு]
கொழும்பில் அரசுடன் பேச்சு நடத்திவிட்டு மீண்டும் பிக்குகள் குழு யாழ். வந்து புலிகளைச் சந்தித்த பின்னர் நாடாளுமன்றத் தெரிவுக்குழு யாழ்ப்பாணம் வரலாம் என்று ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.
பௌத்த பிக்குகள், புலிகளை அடுத்த தடவை சந்திக்கும் போது, தெரிவுக் குழுவின் யோசனைகளின் சாராம்சத்தை உள்ளடக்கிய தீர்வு திட்டத்தை முன்வைக்கலாம் என்று தெரியவருகிறது.
பிக்குகளின் இரண்டாவது சந்திப்பை அடுத்து தெரிவுக் குழு யாழ்ப்பாணம் வரும் என்றும் அந்த செய்திகள் தெரிவித்தன.
இதேவேளை கொழும்பு திரும்பிய பௌத்த பிக்குகள் குழுவினரை தெரிவுக்குழு உறுப்பினர்கள் சந்தித்து விரிவான பேச்சுவார்த்தை நடத்த உள்ளனர்.

## ராணுவ தளபதிகள் அவசர சந்திப்பு

(கொழும்பு)
இராணுவ தளபதிகளின் முக்கிய சந்திப்பொன்று கடந்தவார பிற்பகுதியில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
இராணுவ தளபதி சிசில் வைத்தியரத்ன தலைமையில் நடைபெற்ற இச்சந்திப்பில் வடக்கு-கிழக்கு பகுதிகளை சேர்ந்த பல தளபதிகளும்

[4ம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்


### "மீரா பிரசுரங்கள்"

உயிரோட்டமான நாவல்கள் அக்கினி, முள்முடி மன்னர்கள், விடியலைத் தேடி, ஒரு இல்லத்தில் சில உள்ளங்கள். யாழ்ப்பாணம், சுன்னுசம், சாவகச்சேரி நெல்லியடி, வல்வெட்டித்துறை புத்தகசாலைகளில் விற்பனையாகின்றது. (சி-6200)

### வைத்திய சேவை

பெண்கள், கர்ப்பிணிகள், குழந்தைகள் ஆகியோருக்கும் முறிவு, நெரிவு, சதைநெரிவு, கண்டல் முதலிய சகலவித ரோகங்கட்கும் நிவாரணம் பெற நாடுங்கள். அமுதா வைத்திய நிலையம், டாக்டர் திருமதி அ. ஸ்ரீபதி D. A. M [Cey] [சமாதான நீதவான்], 15, இராசாவின் தோட்டம் ஒழுங்கை, [குயின்பத்மாவீதி], யாழ்ப்பாணம், [சி-6189]

### மணமகன் தேவை

நட்சத்திரம் பூராடம், வயது 23 B. Sc ஆசிரியைக்கு அதே தராதரமுள்ள ஆசிரியர், அக்கவுண்டன் அல்லது என்ஜினியர் மணமகன் தேவை. லஷ்மி திருமண சேவை, செ. விஷபரத்தினம், நவாலி கிழக்கு, மானிப்பாய். (சி-6222)


## 'மே' தினத்தை முன்னிட்டு அலங்கார பந்தல்கள்

(உடுவில்)

மேதினத்தை முன்னிட்டு பேரணி ஆரம்பமாகும் மருதனுமடம் சந்தியில் பெரியதொரு அலங்கார கொட்டகையை அமைக்க சுன்னுசம் வர்த்தகர் சங்கம் முன்வந்துள்ளது.

மேதின பேரணி மருதனுமடம் சந்தியில் ஆரம்பமாகி காங்கேசன் வீதி வழியாகச் சென்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மைதானத்தினை சென்றடைவதுடன் அங்கு மேதினக் கூட்டமும் நடைபெறும்.

மருதனுமடம் சந்தியில் இருந்து இணுவில் கந்தசுவாமி கோவில் வரையும் வீதி அலங்கரிப்பு வேலைகளையும், பந்தல் சோடனைகளையும், சுன்னுசம் வர்த்தக சங்கம் மேற்கொள்வதோடு பேரணியினருக்கு தாகசாந்தி அளிக்கும் பணியையும் மேற்கொள்ள உள்ளது. (109)

## யாழ். பிரதேச அலுவலகத்தில் மலேரியா தடுப்பு இயக்க ஊழியர் பற்றுக்குறை

(டண்டத்தரிப்பு)

யாழ். பிரதேச மலேரியா தடுப்பு இயக்க அலுவலகத்தில் ஊழியர்கள் பற்றுக்குறை நிலவிவருகின்றது.

இரத்தபரிசோதனை செய்யும் நுண்கருவியியலாளர்கள் 17 பேர் கடமையாற்றவேண்டிய இடத்தில் தற்போது 9 பேரே கடமையாற்றி வருகின்றுர்கள். வெளிக்கள உதவியாளர்கள், மலத்தியன் மருந்து தெளிப்போர் ஆகியோருக்கும் பற்றுக்குறை நிலவிவருகின்றது.

அண்மையில் சுயவிருப்பத்தின்பேரில் ஒய்வுபெற்றுச் சென்ற ஊழியர்களின் வெற்றிடங்கள் இதுவரை நிரப்பப்படாது இருப்பதாகவும் அறியப்படுகின்றது. (72)

## மேநாள் எழுச்சிக்கு பலவித ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

தொழிற்சங்கங்கள் தமது உரிமைகளுக்கு மட்டுமன்றி அரசியல் சமுதாய இயக்குதலில் இருந்து அந்நியப்படாது எமது தேசிய உணர்வுகளையும் பிரதிபலிக்கும் செயற்பாடுகளில் இறங்குவதற்கு மேநாள் வழிவகுக்கின்றது.

இம்முறை மேநாள் பேரெழுச்சியாக . புத்துணர்வோடு முன்னெடுக்கப்படுகின்றது.

துறைசார்ந்த தொழிற்சங்கங்கள் தமது யதார்த்த நிலையைப் புரிந்துகொண்டு ஸ்ரீலங்கா தொழிற்சங்கங்களின் தனித்துவத்தைத் தூக்கியெறிந்துவிட்டு தமது தேசிய உணர்வை வெளிக்கொணர்கின்றன. தமிழீழ தொழிற்சங்கங்கள் பேரினவாதத்தால் பாதிப்புக்கு உள்ளாகி நடைப்பிணங்களாவாழ வழியற்று அலைகின்ற நிலைப்பாட்டிலிருந்து உறுதியுடன் ஆர்த்தெழுவதை இம்முறை மேநாளில் காணக்கூடியதாய் இருக்கும். இதன் வெளிப்பாடாக எமது பிரதேசத்தில் சகல இடங்களிலும் சுவரொட்டிகளும், பதாதைகளும் மக்கள் அணிதிரளுமாறு அழைக்கின்றன.

ஆற்றல்மிகுந்த உழைப்பாளிகள் பல இடங்களில் பெரும் பந்தல்களை நிர்மாணித்து வருவதை அவதானிக்ககூடியதாக உள்ளது. பெருந்திரளான மக்கள் இம்முறை எழுச்சிப்பேரணியில் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இது அரசியல் விழிப்புணர்வின் வெளிப்பாட்டினூலாகும் சமகால அரசியல் நிகழ்வுகளில் ஒன்றுகிய தேசிய இனங்களின் எழுச்சி ஒடுக்கப்படும் தேசங்களின் தொழிலாளர்களுக்கு புதிய உத்வேகத்தை கெடுத்துள்ளது.

## தமிழக அரசு மீது கம்யூனிஸ்ட் குற்றச்சாட்டு

(சென்னை)

தமிழ்நாடு அரசு பத்திரிகை சுதந்திரத்தை அடக்குவதாகக் குற்றம்சாட்டி அதை நிறுத்துமாறு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாட்டுப் பிரிவு, மாநில அரசை வற்புறுத்திக் கொண்டுள்ளது.

செல்வி ஜெயலலிதாவின் அரசு பத்திரிகை சுதந்திரத்தின் கழுத்தை நெரித்து வருவதாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. (சே)

## விசேட பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலிகாமம் வடக்கு பிரிவுச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டமொன்று மேமாதம் 3-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மல்லாகம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

## கர்நாடக இசைநிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானத்தில் மாதம் தோறும் வரும் இறுதிச் செவ்வாய்க்கிழமைகளிலும், பௌர்ணமி தினங்களிலும் மாலை 6-30 மணிக்கு "யாழ் ஓசை" இசைமன்றத்தினர் வழங்கும் கர்நாடக இசை நிகழ்ச்சி நடைபெறும்.

## பொது அறிவுப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மக்கள் நலன்புரிக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட திலீபன் ஞாபகார்த்த பொதுஅறிவுப் போட்டியில் பரிசு பெற்றோர் விபரம் வருமாறு:

(1) க. சேரலாதன் [யாழ். இந்துக்கல்லூரி], (2) ந. தேவிகா [யாழ். இந்து மகளிர்கல்லூரி], (3) ச. சுகந்தினி [யாழ். இந்துமகளிர் கல்லூரி.

## காவல்துறை நடவடிக்கை

(பண்டத்தரிப்பு)

போக்குவரத்திற்கு இடைஞ்சல் விளைவிக்கும் வண்ணம் வீதியால் ஒரே வரிசையில் சைக்கிளில் செல்வோர்மீது சங்கானை காவல்துறையினர் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். (72)

## பொதுசன உதவிப் பணம்

(சித்தன்கேணி)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்டவர்களுக்கு ஜனவரி, பெப்ரவரி மாதங்களுக்குரிய பொதுசன மாதாந்த உதவிப்பணம் வழங்கப்படுகின்றது.

இப்பகுதியிலுள்ள அவ்வப் பகுதி கிராமசேவை அலுவலர்களினுல் பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்களுக்கு ஜனவரி பெப்ரவரி ஆகிய இரண்டு மாதகளுக்குமுரிய பொதுசன மாதாந்த உதவிப்பணம் வழங்கப்படுகின்றது. (137)

## விதைகள் உரம் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

கெயர் யு. எஸ். எயிட் விவசாய அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பண்டத்தரிப்புபலநோக்கு கூட்டுறவுச் சங்க பிரதேசத்தில் நூறுவிவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு குரக்கன் செய்கைக்கும், 65 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டு எள்ளுச் செய்கைக்கும் உதவிகள்வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு விதைகள், உரம், எரிபொருள், மண்வெட்டி ஆகியன இலவசமாக கெயர் நிறுவனத்தினூல் வழங்கப்பட்டு வருகின்றது. (72)

## இராசி பலன்

23/04/1992

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு சித்திரை 16)

ஏகாதசி முன்னிரவு 10-13 வரை, சதயம் முற்பகல் 8-39 வரை, மரணயோகம், இராகு காலம் பகல் 2-58 முதல் 4-28 வரை, சுபநேரம் காலை 10-28 முதல் 11-58 வரை.

மேஷம்: அறிஞர் சந்திப்பு, தொழில் சிறப்பு, பணவரவு.

இடபம்: கடமையுணர்வு, பசப்பு வார்த்தை, குடும்ப மகிழ்ச்சி.

மிதுனம்: இனசனவிரோதம், தடுமாற்றம், யோசனை.

கடகம்: வாக்குவாதம், மனமாற்றம், விரக்தி.

சிங்கம்: காரிய சித்தி, பயண அனுகூலம், புகழ்.

கன்னி: குடும்ப சுகம், புத்திரர் பெருமை, தானதர்மம்.

துலாம்: அயலவர் துன்பம், வாக்குகலகம், வைத்திய செலவு

விருச்சிகம்: தொழில் பகை, அமைதிக்குறைவு, செலவு.

தனுசு: தாராள உள்ளம், விரோதிகள் நச்சரிப்பு, புதிய முதலீடு.

மகரம்: விதண்டாவாதம், மனசஞ்சலம், குடும்பபகை.

கும்பம்: சுப காரியம், இனிய சந்திப்பு, பொருள் உதவி.

மீனம்: காரியதடை, பெற்றோர் துயர், அவசர முடிவு.

ஜோஸ்யர்

## "எழுத்தாளர்கள் சமகால நிகழ்வுகளை எழுதவேண்டும்"

(உடுவில்)

'தற்காலத்தில் எழுத்தாளர்கள் பலர் சமகால சம்பவங்களை வைத்து எழுதுவது குறைவு. சமகால நிகழ்வுகள் தான் கதைகளாக, இலக்கியங்களாக வெளிவர வேண்டும்''

இவ்வாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சுந்தரம் டிவகலாலா 'வலசைகள்' ஒன்றுகூடல் நிகழ்வில்கூறினுர்.

இவ் விழாவில் ஏ.ரி. பொன்னுத்துரை, கலாநிதி சண்முகதாஸ், டொமினி ஜீவா, அனு. வை. நாகராசன் போன்ற மூத்த எழுத்தாளர்கள் பங்கு பற்றினுர்கள்.

இளம் எழுத்தாளர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும் எனவும் எழுத்தாளர்கள் தமது கருத்துக்களை எழுதி வெளியிடுவதற்கேற்ற களம் இல்லாதிருக்கிறதை சுட்டிக்காட்டி, பத்திரிகைகள் எழுத்தாளர் எழுதுவதற்கேற்ற களத்தை உருவாக்கித்தர வேண்டுமெனவும் அனு. வை. நாகராஜன் குறிப்பிட்டார்.

'செங்கையாழியானின் நாவல்கள்' என்ற புதியநாவல் தொகுப்பு பற்றியும் ஆராயப்பட்டது. பிரதிமாதமும் இவ்வாறன இலக்கிய சந்திப்புக்கள் நடத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (சு-109)

## விபுலானந்தர் நினைவகம்

(மட்டக்களப்பு)

காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரியில் சுமார் 30 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 3 மாடிக் கட்டிடமான சுவாமி விபுலானந்தர் நூற்றுண்டு நினைவகம் அடுத்த மாதம் திறந்து வைக்கப்படும். (கே)

## நமக்குதுணிவும் இருக்க வேண்டும்

(யாழ்ப்பாணம்)

"நமக்குகல்விவிழிப்புணர்வு இருந்தால் மட்டும் போதாது துணிவும் இருக்கவேண்டும்."

இவ்வாறு தமிழீழவிடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் யோகரத்தினம் யோகி, யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்ற வள்ளுவர் வழியில் வீரம, மானம்'' என்ற நூல் வெளியீட்டு விழாவின் போது கூறினுர்.

விழாவுக்கு எழுத்தாளர் 'சொக்கன்' தலைமை வகிக்க புதுவை இரத்தினதுரை வெளியீட்டுரை நிகழ்த்தினுர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் நிதிப்பொறுப்பாளர் தமிழேந்தி, க. திருநாவுக்கரசு, செல்வி சுதாமதி, பண்டிதர் பரந்தாமன் ஆகியோரும் நூல் பற்றி ஆய்வுரை நிகழ்த்தினுர்கள். (சு)

## உதைபந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினுல் நடாத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் முன்றைய ஆட்டம்;

குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து நாவாந்துறை சென்நீக்கிலஸ் அணிமோதும். இப்போட்டி யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடமைதானத்தில் நடைபெறும். (வி)

## விவசாய ஊக்குவிப்பு கடன்

(உடுவில்)

ஏழாலை தெற்கு, மயிலங்காடு போன்ற இடங்களில் உள்ள மக்களுக்கு விவசாய ஊக்குவிப்புக் கடனுக ரூபா முப்பதாயிரத்து ஐந்நூறு சர்வோதயத்தினரால் வழங்கப்பட்டுள்ளது.

இக்கடன் தொகை இருபது குடும்பங்களுக்கு பங்கிட்டு வழங்கப்பட்டுள்ளது. மேலும் அதேகிராமத்தைச சேர்ந்த இரண்டு குடும்பங்கள் வியாபார முயற்சிகளை மேற்கொள்ளவென தலா மூவாயிரம் ரூபாவும் சர்வோதயத்தினரால் வழங்கபட்டுள்ளது. (109)

## சாகித்திய விழாவில் எழுத்தாளர் கௌரவிப்பு

(கொழும்பு)

சாகித்திய விழாவில் 25 தமிழ் எழுத்தாளர்களுக்கு சான்றிதழும், தமிழ்மணி என்ற பட்டமும், பணமுடிச்சும் வழங்கப்படவுள்ளது.

மே மாதம் 10ம் திகதி நடைபெறும் சாகித்தியவிழாவின் இறுதிநாள் நிகழ்ச்சியில் பிரதமர் டி. பி. விஜயதுங்கா பிரதம விருந்தினராக கலந்துகொண்டு இவ் விருதுகளை வழங்கவுள்ளார்.

## சங்கானையில் 7வது உணவு முத்திரை வழங்க ஏற்பாடு

(சித்தன்கேணி)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் 7வது தொடர் வறுமை நிவாரண உணவு முத்திரைகள் வழங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் 6வது தொடர் வறுமை நிவாரண உணவு முத்திரைகள் உள்ளவர்களுக்கு 7வது தொடர் வறுமை நிவாரண உணவு முத்திரைகள் வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை உதவி அரசாங்க அதிபர் செல்வி றூபினி கனகரத்தினம் மேற்கொண்டுளார். (137)

## பகவத்கீதை வகுப்பு

(கொழும்புத்துறை)

கந்தர்மடம் ஸ்ரீ சிவகுருநாத குருபீடம் வேதாந்த மடத்தில் தொடர்ந்து பிரதி சனிக்கிழமை ஞாயிற்றுக்கிழமைகளில் பி.ப. 4.00மணி தொடக்கம் 5.00மணி வரை "பகவத்கீதை" வகுப்புநடைபெற்று வருகிறது. (154)

# சிங்கள, தமிழ் மக்களிடையிலான இன மோதல் அந்நிய ஊடுருவலையே அதிகரிக்கச் செய்யும்

## பௌத்த குழுவிடம் இந்து இளைஞர் பேரவை மகஜர்

(யாழ்ப்பாணம்)

"புத்தபகவான் பஞ்சசீலக் கொள்கைகளின்பால் உயிர்கள் வருந்தாமையையும் அமைதியையும் சமாதானத்தையும் போதித்தார். யுத்தம் நடைபெறும் இடங்களுக்கும் உயிர்கள் வருந்துகின்ற இடங்களுக்கும் நேரில் சென்று அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்தினர் என்பது வரலாறு. பிம்பிசாரமன்னது யாகத்தில் ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியிடுதலை புத்தபகவான் தடுத்தார் என்பதும் கலிங்கப்போரில் ஏற்பட்ட உயிரழிவுகளைக்கண்ட அசோகச்சக்கரவர்த்தி பௌத்த மதத்தை தழுவினார் என்பதும் முக்கியமான நிகழ்வுகளாகக் கருதப்படுகின்றன. இந்துமதம் உட்பட ஏனைய மதங்களும் அமைதியையும் சமாதானத்தையும் மேலாக நேசிக்கின்றன."

யாழ்ப்பாணம் வருகை தந்த பௌத்த நல்லெண்ணத்தூதுக் குழுவுக்கு யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை சமர்ப்பித்த மகஜரில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் கூறப்பட்டதாவது;

இந்த வகையில் புத்தபகவானது (பாதச்சுவடுகளை) பாதார விந்தங்களை பின்பற்றும் தங்களது அமைதிக்கும் சமாதானத்துக்குமான பயணம் வெற்றியளிக்கவும், உயிர்கள் படும் துன்பங்கள் நீங்கவும், எல்லாம்வல்ல இறைவன் அருள் பாலிப்பாராக.

இத்தீவில் கலாசார பண்பாடுகளால் பெருமளவு ஒன்றுபட்ட தமிழ் சிங்கள மொழிகளைப்பேசும் மக்கள் தொன்றுதொட்டு அமைதியுடனும் சமத்துவத்துடனும், சமாதானத்துடனும் சகோதரத்துவத்துடனும் அதேசமயம் தனித்துவத்துடனும் சிறப்புற்று வாழ்ந்து வந்தனர் என்பது வரலாறு. ஆரம்பகாலத்திலிருந்து இருமொழி பேசும் மக்களிற்கு இடையிலான மோதல்கள் மக்களிடையே அந்நிய அரசியல் பொருளாதார சமய கலாசார ரீதியான ஊடுருவல்களுக்கும், செல்வாக்கு செலுத்துகைக்கும் வழிவகுத்தன. போர்த்துக்கேயரின் வருகையுடன் ஆரம்பித்த பாதிப்புக்கள் துன்பதுயரங்கள் தமிழ் சிங்கள மொழிபேசும் மக்களுடைய தனித்துவத்தினையும் சிறப்பையும் சமத்துவத்தையும் பாதித்து வருகின்றன.

அன்றிலிருந்து இன்றுவரை மக்கள் வேண்டியளவு இரத்தம் சிந்திவிட்டார்கள். பெருமளவு பௌத்த இந்து மதங்களைச் சார்ந்த மக்களும், ஏனைய மதங்களைச் சார்ந்த மக்களும் பலியாகி வருகின்றார்கள்.

இந்நிலையில் கீழ்க்காணும் விடயங்களை குறிப்பாக தென்னிலங்கையிலும் ஏனைய பகுதிகளிலும், ஏற்படக்கூடியதும், செயற்படுத்தப்படக்கூடியதுமான நிலைமையை ஏற்படுத்துவது. அப்பாவி உயிரின அழிவைத் தடுத்து அமைதியையும் சுபீட்சத்தையும் ஏற்படுத்துமென திடமான முறையில் வலியுறுத்துகிறோம்,

ஃ தினசரி பேரழிவுகளை ஏற்படுத்தி வரும் இந்த முடிவில்லாத யுத்தம் தொடர்பாக, உடனடியான யுத்த நிறுத்தம் ஒன்று ஏற்படுத்தப்படவேண்டும் (விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே).

ஃ தமிழ்ப் பிரதேசங்களில் கணிசமானளவு பகுதிகளை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் விடுதலைப்புலிகளுடன் அரசியல் தீர்வுக்கான பேச்சுக்களை நடத்துவதுடன் மட்டுமல்லாது மிகவும் துரிதமான முறையில் அதனை வெற்றிபெறச் செய்யவும், அத் தீர்வுகளை முன்னைய காலங்களைப் போலல்லாது காலந்தாழ்த்தாது திடமான முறையில் செயற்படுத்தவும், வழிவகுத்தல் வேண்டும்.

ஃ தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல் வேண்டும்,

ஃ இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்துள்ள நமது மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குச் சென்று வாழ வழிவகுத்தல் வேண்டும்.

ஃ பெருமளவு புனிதமான இந்து ஆலயங்கள் பூட்டப்பட்டும் வழிபாடற்றும் உள்ளன. அப்பகுதிகளிலுள்ள இராணுவக் கெடுபிடிகள் அகற்றப்பட்டும் நீக்கப்பட்டும் மீண்டும் அவ்வாலயங்களில் நித்திய நைமித்திய கிரியைகள் வழிபாடுகள் நடைபெற வழிவகுத்தல்வேண்டும்.

ஃ கற்பூரம் உட்பட பூசைக்குரிய பொருட்கள் ஆலயத் தேவைக்கான ஏனைய பொருட்கள் ஆகியவற்றை எடுத்துச் செல்வதற்கான பொருளாதாரத் தடைகளை உடன் நீக்குதல் வேண்டும்.

மேற்கண்ட விடயங்களில் சாதகமான பலாபலன்கள் கிட்டுவதற்கான சூழ்நிலைகளை குறிப்பாக தென்னிலங்கையிலும் ஏனைய பகுதிகளிலும் ஏற்படுத்தி மக்களும் ஏனைய உயிர்களும் துன்ப துயரங்கள் நீங்கி அமைதியுடனும் சமத்துவத்துடனும், சமாதானத்துடனும் வாழ தாங்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றியடைய எல்லாம்வல்ல இறைவன் நல்லருள்பாலிப்பானாக,

---

## "300 வர்த்தகர்கள் வங்கியில் பெற்ற ரூ. 6கோடி கடன் இதுவரை திரும்பப் பெறப்படவில்லை

(கொழும்பு)

1989 ம் ஆண்டு வரையில் 300 வர்த்தகர்களுக்கும் தனி நபர்களுக்கும் 6 கோடி ரூபா அரச வங்கிகளினால் கடன் வழங்கப்பட்டு இது வரை திரும்பப் பெறாமல் இருந்து வருகிறது.

ஐ. தே. க. கூட்டமொன்றில் உரையாற்றிய ஜனாதிபதி ஆர். பிரேமதாசா இத்தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் பேசுகையில்; இந்தக் கடனை திருப்பிச் செலுத்தாதவர்களிடமிருந்து மீளப்பெற்றுக்கொள்ள வங்கிகள் நடவடிக்கை எடுத்துவருகின்றன.

இந்த அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட்டவர்கள் இரண்டு வழிகளில் பணத்தை பெற்றுக்கொண்டார்கள். கடந்த காலத்தில் நடைபெற்றது போல சூறையாடுவதும் களவெடுப்பதும் முதலாவதுவழி. வெளிநாட்டு ஒப்பந்தக்காரரிடமிருந்து லஞ்சம் பெற்றுக்கொள்வது இரண்டாவதுவழி என்றும் கூறினார். (கே)

---

## பௌத்த குழுவின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விஜயம்

(கொழும்பு)

யாழ். மாவட்டத்திற்கு 5 நாள் விஜயத்தை மேற்கொண்டுவிட்டு நேற்று முன்தினம் கொழும்பு திரும்பிய பௌத்த குழுவினரின் விஜயத்தை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விஜயம் என கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகை ஒன்று குறிப்பிட்டுள்ளது. விடுதலைப் புலிகளுடனான யுத்தம் தீவிரமடைந்தபின் முதல்முறையாக விஜயம் மேற்கொண்ட இந்த பௌத்த குழுவினருக்கு தெற்கில் ஆதரவு ஒருபுறம், எதிர்ப்பு ஒருபுறம் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. (கே)

---

## பரீட்சை பெறுபேறுகள் கிடைக்கவில்லை

(பண்டத்தரிப்பு)

மருத்துவ மாதர்கள் தரம் இரண்டிலிருந்து முதலாம் தரத்திற்கு பதவி உயர்வு பெறுவதற்காக சுகாதார திணைக்களத்தினால் கடந்த 1990ம் ஆண்டு [illegible] மாதத்தில் நடாத்தப்பட்ட எழுத்துப் பரீட்சை, செயல்முறைப் பரீட்சை ஆகியவற்றுக்கான பெறுபேறுகள் இதுவரை சம்பந்தப்பட்டவர்களுக்கு கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (72)

---

## விசாரணைகாலம் நீடிப்பு

(கொழும்பு)

காணாமல் போவோர் குறித்து விசாரணை நடத்தி வரும் ஆணைக்குழுவின் விசாரணைக்காலம் அடுத்த வருடம் ஏப்ரல் 11ம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி விசாரணை ஆணைக்குழு ஜனாதிபதி பிரேமதாசாவினால் நியமிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (க)

---

## குண்டு வெடிப்பில் சிறுவன் பலி

(புதுடில்லி)

புதுடில்லியிலுள்ள முஸ்லிம் பள்ளிவாசலான ஜும்மா மஸ்ஜித் அருகே குண்டு ஒன்று வெடித்ததில் 11 வயதுச் சிறுவன் ஒருவன் பலியானான். 5 சிறுவர்கள் காயமடைந்தனர்.

குப்பைத்தொட்டியில் பந்தை எடுத்த சிறுவன் அங்கு இருந்த குண்டு வெடித்ததினால் பலியானான்.

புதுடில்லியில் இதற்குமுன்னர் கடந்த 4 நாட்களில் 3 குண்டு வெடிப்புக்கள் இடம்பெற்றது குறுப்பிடத்தக்கது.

---

★ தராசுப் படிகளுக்கு

## முத்திரையிடத் தவறுவோர் மீது கடும் நடவடிக்கையாம்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல வியாபாரிகளும் தமது தராசு,படிகள் அனைத்தையும் நேரில் கொண்டுவந்து முத்திரையிடவேண்டும். தவறுவோர் மீது கடும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ். மாவட்ட நிறுவை அளவுப்பிரிவுச் செயலகதிணைக்களப் பொறுப்பதிகாரி திரு. கா. நாகலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

நிறுவையளவு உபகரணங்களுக்கு முத்திரையிடும் வேலைகள் யாவும் யாழ். உள்நாட்டு வர்த்தகத் திணைக்கள நிறுவை அளவைப் பிரிவு மீண்டும்ஆரம்பித்துள்ளது.

பிரதி புதன் கிழமைகளில் யாழ். செயலகத்தில் நிறுவை அளவுகள் பகுதி அலுவலகத்தில் காலை 8 30 மணி முதல் பிற்பகல் 2-00மணிவரை நிறுவைகள் அளவுகள், லீற்றர், மீற்றர் அளவுகள், மேடைத் தராசு, தூக்குத்தராசுபோன்றவற்றுக்கு முத்திரையிட்டுக் கொள்ளமுடியும் என அவர் தெரிவித்துள்ளார். [154]

---

## சங்கத்தில் இணையுங்கள்

(யாழ்ப்பாணம்)

"வர்த்தக ஊழியர்கள் அனைவரும் சங்கத்தில் இணைந்து சங்கத்தை பலப்படுத்தவேண்டும் ஐக்கியப்பட்ட வர்த்தகர் ஊழியர்களின் ஏகோபித்த குரல் என்றும் தோல்விகண்டதில்லை."

இவ்வாறு மேதினத்தையொட்டி வடபிராந்திய வர்த்தக ஊழியர்சங்கத்தின் புதிய தலைவர் திரு. எஸ். இராமச்சந்திரன் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

வர்த்தக ஊழியர்களின் உரிமைகளை படிப்படியாக சங்கம் பெற்றுக்கொடுத்து வருகின்றது. இதை சகல ஊழியர்களும் உணர்ந்துசங்கத்தில் இணைந்து சங்க செயல்பாடுகளில் பங்கெடுத்து கொள்ள வேண்டும்.

---

## குண்டு வெடிப்பு: சந்தேகநபர் கைது

(கொழும்பு)

அம்பாறை, மஹரகம குண்டுவெடிப்பு சம்பவம் தொடர்பாக தேடப்பட்டு வந்த முக்கிய சந்தேகநபரான மேரி என்பவர் கடந்த சனிக்கிழமை அம்பாறையில் வைத்துதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

பிரஸ்தாப நபர் குண்டு பொருத்தப்பட்ட காரில் வந்து வத்தளையில் இறங்கினார் எனவும் குறிப்பிட்ட கார் மஹரகம குண்டுவெடிப்புக்கு பயன்படுத்தப்பட்டதாகவும் பொலிஸ் விசாரணை மூலம் தெரியவந்துள்ளது. (க)

---

## பால் மா உணவில் பன்றிக் கொழுப்பு கலப்பு

(கொழும்பு)

கொள்ளைலாபம் பெறும் நோக்கில் பால்மா வகைகளில் பன்றிக்கொழுப்பு கலக்கப்படுவதாக தமக்கு ஆதாரபூர்வமான தகவல்கள் கிடைத்திருப்பதாக கேகாலை மாவட்ட ஐக்கிய சோஷலிச முன்னணி எம்,பி. அத்தாவுட செனிவிரத்தின தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் அண்மையில் நடைபெற்ற மொத்த விற்பனைவு வரி மற்றும் சுங்கக்கட்டணை சட்ட தீர்மானம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரை உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; ஒரு சில வர்த்தகர்கள் பால்மா கொழுப்பு கலப்பதற்கு பதிலாக பன்றிக் கொழுப்பு கலப்பதாகவும் இது குறித்து அரசு விசாரணை நடாத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். (க)

---

## குடை யாருடையது?

(யாழ்ப்பாணம்)

யாழ். மிட்டாஸ் கடை சந்தியில், குடையொன்று மீசாலையைச் சேர்ந்த கு. வி. மகாலிங்கத்தினால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டி பெற்றுக்கொள்ளவும்.

# கோவை மாலைமுரசு, முரசொலி ஆசிரியர்களைக் கைதுசெய்ய பிடிவிருந்து பிறப்பிக்கப்படும்

(சென்னை)

கோவை மாலைமுரசு ஆசிரியர் திரு. எஸ். கே சுந்தரையும், முரசொலி ஆசிரியர் திரு. எஸ். செல்வத்தையும் கைது செய்வதற்கு பிடி வாரண்ட் பிறப்பிக்கப்படுமென்று தமிழக சட்டப்பேரவை சபாநாயகர் திரு சேடப்பட்டி முத்தையா தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவையில் நேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்ட தகவலை தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவிக்கையில், இலஸ்ரேட்டட் வீக்லி ஒவ் இந்தியாவின் முன்னாள் கட்டுரையாளர் திரு. கே.பி. சுனிலுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட பிடி வாரண்ட் மீது உச்ச நீதிமன்றம் இடைக்கால தடை விதித்திருப்பது சட்டப் பேரவையை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாதென்றும் கூறினர்

எனவே பேரவைசெயலரோ காவற்றுறை ஆணையாளரோ இவ்விடயம் தொடர்பாக உச்ச நீதிமன்றிலிருந்து வரக்கூடிய எந்தத்தடைஉத்தரவையும் பொருட்படுத்தலாகாது என்றும் ஆணையிட்டார்.

கோவை மாலை முரசு, மற்றும் முரசொலி பத்திரிகைகளின் ஆசிரியர்கள் பேரவைக் கூட்டில் ஏறி சபையினரின் கண்டனத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டுமென்ற தமது ஆணைக்குப் பதிலாக ஒரே மாதிரியான கடிதங்களை எழுதியிருப்பதாகவும் குறைப்பட்டார்.

சம்பந்தப்பட்ட விவகாரணையை உச்ச நீதிமன்றம் விசாரணைக்கெடுத்துக் கொள்வதால் சட்டப்பேரவைக்கு வரமுடியவில்லையென்றும் இதனைசபையை அவமதிப்பாகக் கொள்ளவேண்டாமென்றும் இருவரும் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டார்.

உச்சநீதிமன்றத்திற்கும் உரிமை மீறல் பிரச்னைக்கும் எதுவித சம்பந்தமும் இல்லையெனக்குறிப்பிட்ட சபாநாயகர் அவர்களை கைது செய்ய பிடிவிருந்து பிறப்பிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

அரசியலமைப்பின்படி உச்ச நீதிமன்றமும் பேரவையும் சுயேட்சையானவை என்றும் ஒன்றை ஒன்று சட்டுப்படுத்த முடியாது என்றும் தெரிவித்தார்.

# பத்திரிகையாளர் பகிஷ்கரிக்க முடிவு

(சென்னை)

தமிழ்நாடு சட்டப்பேரவையின் இன்றைய கூட்டத் தொடரை பகிஷ்கரிக்குமாறு நான்கு பத்திரிகை ஸ்தாபனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன,

இரண்டு செய்தி ஏடுகளின் ஆசிரியர்களுக்கு எதிராகவும் ஒரு முன்னாள் ஆசிரியருக்கு எதிராகவும் சட்டசபை சபாநாயகர் பிறப்பித்தபிடிவாரண்டுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாகவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. [கே]

## இ. போ. ச. ஊழியருக்கு

(யாழ்ப்பாணம்)

1980 யூலை மாதம் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட வட பிராந்தியப் போக்குவரத்துச் சபை ஊழியர்களின் நிவாரணக் கொடுப்பனவு சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம், கோண்டாவில் சாலையில் நாளை புதன்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெற உள்ளது. வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட அனைவரையும் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

### ராணுவ

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கலந்து கொண்டனர்.

எனினும் இச்சந்திப்பு தொடர்பாக கூட்டுப்படைத் தலைமையகத்திற்கு எதுவித தகவலும் தெரிவிக்கப்படவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பதினேராம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்பட்டது.

ஒரு மணி நேர இடைவெளியின் பின்னர், மீண்டும் அவ்ரோ, குண்டு வீச்சு விமானங்கள் இணைந்து பயங்கரத் தாக்குதலில் ஈடுபட்டன.

இதேவேளை, ஹெலிகொப்டரில் இருந்து சரமாரியான துப்பாக்கிப்பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

## சீமெந்து ஊழியர் சம்பளம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சீமெந்து நிறுவன ஊழியர்களின் சித்திரைமாத 25 வீத சம்பளம் நேற்று முதல் தற்காலிக காரியாலயமான கண்ணகி ... த்தில் வைத்து வழங்கப்படுகிறது.

## அவசர கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலைக்கலாசாலை ஆசிரிய மாணவர்களையும் நாளை 29-ம் திகதி புதன்கிழமை முற்பகல் 10-10 மணிக்கு கலாசாலை மண்டபத்தில் முக்கிய விடயம் பற்றி தீர்மானிக்க விருப்பதால் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் கலாசாலை அதிபர் கேட்டுள்ளார்.

0 0

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி பகுதியில் உள்ள விளையாட்டுக்கழகங்களிடையிலான கூட்டம் இன்று நடைபெற உள்ளது. பருத்தித்துறை பிரிவில் காலை 9 00 மணிக்கும் கரவெட்டி பிரிவில் காலை 11-00 மணிக்கும் அவ்வவ் உதவி அரசாங்க அதிபர் செயலகத்தில் நடைபெறும். அனைத்துக் கழகங்களின் பிரதிநிதிகளையும் தவறாது சமூகம் கொடுக்கும்படி விளையாட்டு உத்தியோகத்தர் கேட்டுக் கொண்டுள்ளார்:

### வவுனியா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

களிலுள்ள இராணுவ முகாம்களில் பெருமளவில் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். தரைப்படை, விமானப் படையின் உதவியுடன் இந்த தாக்குதல் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

படையினருக்கு உதவியாக குண்டுவீச்சு விமானங்கள், ஹெலிகொப்டர்கள் இந்த தாக்குதல் நடவடிக்கையின் போது பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

### பொலிஸாரின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஸாரின் நிலை பற்றி அறிந்து கொள்ளும் பொருட்டு, புலிகளிடமிருந்து அவர்களை விடுதலை செய்வதற்கு ஒழுங்கு செய்யுமாறு அரசை வலியுறுத்துவார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, கொழும்பு திரும்பிய பௌத்த பிக்குகளைச் சந்திப்பதற்குத் தென்பகுதி அரசியல்வாதிகள், அரசாங்கத் தரப்பு அமைச்சர்கள் பெரிதும் ஆர்வம் காட்டிவருவதாகக் கொழும்பில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமது யாழ். விஜயம் தொடர்பாகப் பிக்குகள் குழுவினர் விரிவான அறிக்கை ஒன்றை அரசுக்குச் சமர்ப்பித்த பின்னரே வெளியாட்களைச் சந்திப்பர் எனத் தெரியவருகின்றது.

# போதைவஸ்து கடத்திய பெண் கைது

(கொழும்பு)

சென்னையிலிருந்து கட்டுநாயக்கா விமான நிலையம் வந்து சேர்ந்த பெண் ஒருவரிடமிருந்து 5 லட்சம் ரூபா பொறுமதியான போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலைய போதைப்பொருள் பணியக அதிகாரிகள் இந்தப் பெண்ணிடமிருந்து435 கிராம் எடையுள்ள ஹெரோயின் போதைப் பொருளை கைப்பற்றினர்கள்.

இந்தப் பெண்ணின் சங்கத் தீர்வையைச் செலுத்தவிமான நிலையம் வந்திருந்த பாலத்துறையைச் சேர்ந்த இளைஞர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்,

கைதுசெய்யப்பட்ட பெண் சென்னைக்கும் கொழும்புக்கு யிடையே கிரமமாக பிரயாணம் செய்து வந்திருப்பதாக விசாரணை மூலம் தெரியவந்துள்ளது

### இரு மோதலில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மணலாறில் கப்டன் வேங்கையன் (மா. ஜெகநாதன் மட்டுநகர்) கப்டன் சிவராமன் [அல்பிரட் அருள்சீலன் வட்டக்கண்டல்] லெப். செங்கோலன் (தி. தயாபரன் மட்டு) லெப். கர்ணன் த. பகிரதன் மட்டு) ஆகியோரும் மட்டக்களப்பில் கப்டன் நித்தி (ராசையா நித்தியானந்தன் மஞ்சந்தொடுவாய்) வீரவேங்கை பாலு மகேந்திரா ஆகியோரும் வீரச்சாவு அடைந்தனர்.

வீரச்சாவு அடைந்தவர்களுக்கு புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

### மன்னாரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நண்பகல் மன்னார் வங்காலை இராணுவமுகாமிலிருந்து சிறிலங்கா இராணுவ அணியொன்று நாணட்டான் முகாமுக்கு ரோந்து சென்று கொண்டிருந்தது.

ரோந்து சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் புலிகள் வைத்த வாகன கண்ணிவெடியொன்றைக் கண்டனர். அந்த வாகனகண்ணிவெடியை ரோந்து சென்ற படையினர் அகற்றும்முயற்சியில் ஈடுபட்ட போது அக்கண்ணிவெடி வெடித்து பல இராணுவத்தினரின் உடல்கள் சிதறின.

பெருமளவு படையினர் படுகாயமடைந்தனர். இதை யடுத்து இப்பகுதிக்குவிரைந்த மேலதிக படையினர் படுகாயமடைந்த படையினரை மீட்டுச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ரி)

# அந்நிய சக்திகளுக்கு நாட்டில் இடமில்லை — ஜனதிபதி பிரேமா

(கொழும்பு)

''பொருளாதாரம் மற்றும் அரசியல் அல்லது சமூக ரீதியில் நாட்டை கட்டுப்படுத்த முற்படும் எந்த ஒரு அந்நிய சக்தியின் தலையீட்டையும் நாம் அனுமதிக்கப்போவதில்லை''.

அம்பாந்தோட்டையில் நேற்று காலை நடைபெற்ற ஐ. தே. கட்சியின் மாவட்ட மட்டத்திலான மாநாட்டில் கலந்து உரையாற்றிய ஜனதிபதி பிரேமதாசா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் முக்கியமான பிரச்சனைகள் குறித்து ஐ தே. கட்சி சமர்ப்பித்துள்ள தீர்வு திட்டங்கள் குறித்து மாற்று திட்டம் எதனையும் எதிர்க் கட்சிகள் முன்வைப்பதாயில்லை என்றும் அவர் கவலை வெளியிட்டார்.

மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காணும் நோக்கோடு அரசு பல்வேறு திட்டங்களை செயற்படுத்தி வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க)

# ரோந்து படையினரை புலிகள் விரட்டியடிப்பு

(மணலாறு)

மணலாறில் ரோந்து வந்த படையினரை, விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்குதல் நடத்தி முகாமுக்கு விரட்டி அடித்தனர்.

நேற்று முன்தினம் காலை 8-00 மணியளவில் இத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.

புலிகளின் ஒருமணி நேரத் தீவிரத் தாககுதல்களினால், இராணுவத்தினர் பலத்த இழப்புக்களுடன் தப்பி ஓடினர்கள்.

இத்தாக்குதலை அடுத்து, மண்கிண்டிமலை, முந்திரிகைக்குளம் இராணுவ முகாம்களில் இருந்து ஷெல் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.

## சிறந்த ஊர்திக்கு பரிசுகள்

(யாழ்ப்பாணம்)

பேரினவாதத்தின் கொடூரத்திலிருந்து விடுபடுதெற்கான வீரம் செறிந்த தேசிய விடுதலைப் போராட்டத்தை உயிரோட்டத்துடன் பிரதிபலிக்கும் சிறந்த மேதின ஊர்தித் தயாரிப்பிற்கான பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

வளர்ச்சி கண்டுவரும் விடுதலைப் போராட்டத்தின் சகல பரிமாணங்களையும் ஊர்திகளில் சித்தரிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

இக்கலை வெளிப்பாடுகளை ஊக்குவிப்பதற்காக மே நாள் செயற்பாட்டுக்குழு ஊர்திப்போட்டியை ஏற்பாடு செய்துள்ளது. பார்வையிட்டு தகுதிகாண்பதற்கான நடுவர் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பு பகுதியில் 17 தமிழர் கைது

[மட்டக்களப்பு]

மட்டு. கிளாச்சேனை கிராமத்தில் 17 தமிழர்கள் இராணுவத்தினரால் பிடித்துச் செல்லப்பட்டனர்.

நேற்று முன்தினம் காலை 6 மணியளவில் களுவாஞ்சிக்குடி, மண்டூர், 16ம் கிராமம் ஆகிய இராணுவ முகாமிலிருந்து தேச விரோதிகளுடன் வெளியே வந்த இராணுவத்தினர் கிளாச்சேனைக் கிராமத்தைச்சுற்றிவளைத்தனர்.

இச்சுற்றி வளைப்பின்போது பலர் கைது செய்யப்பட்டு கடும் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டனர்.

### இராணுவத்திற்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளது.

தொண்டர்படைகளில் சேர்வோர்க்கான நேர்முகப்பரீட்சைகள் கொழும்பு, கண்டி, காலி ஆகிய பிரதேசங்களிலுள்ள ராணுவ அலுவலகங்களில் நடாத்தப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (கே)

### படுகொலைகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மளவில் அரசுக்கும் தொடர்பிருப்பதாக முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் உடுகம்பொல தெரிவித்ததையடுத்தே மன்னிப்புச்சபை புதிதாக பல தகவல்களை திரட்டி வருகிறதாம்.

இப்படுகொலைகள் குறித்துப் பல விபரங்களுடன் மன்னிப்புச்சபை விரைவில் அறிக்கை ஒன்றை வெளியிடுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

### தேர்தல்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மாறு தேர்தல் திணைக்களத்தை அரச அதிகாரிகள் பணித்திருப்பதாக 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தேர்தல்கள் குறிப்பிட்ட காலப்பகுதியில்தான் நடத்தப்படும் என ஜனதிபதி தெரிவித்திருக்கும் இத்தருணத்திலேயேதான் தேர்தல் திணைக்களமும் உசார்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய திரைப்படத்திற்கு பௌத்த மாநாட்டில் எதிர்ப்பு

(கொழும்பு)

புத்தபெருமானை விஷ்ணுவின் அவதாரமாகச் சித்தரிக்கும் திரைப்படம் ஒன்று, இந்தியாவில் படமாக்குவதற்கு உலக பௌத்த உயர் மாநாட்டில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் நேற்று அஸ்கிரிய சர்வதேச மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி மாநாட்டிலேயே எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

கௌதம புத்தர் இந்து மதத்தை சேர்ந்தவராதலால் இவர் விஷ்ணு அவதாரமென இத்திரைப்படம் சித்தரிக்கவுள்ளதாம்.

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/81